இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்

[1991, யூன் மாதம் 20 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1991, யூன் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 | தபாற் செலவு : ரூபா 1.00

1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்

[1991 யூன் மாதம் 20 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ 84/90 / 3002

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்கச் சட்டத்தில் 5அ என்னும் பிரிவை உட்புகுத்தல்.

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 5அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"வைப்பைச் செலுத்தத் தவறுதல், தவறொன்றுதல் வேண்டும்.

5அ. (1) நிதிக்கம்பெனி ஒன்று, வைப்பு முதிர்வடையும் தேதியன்று அல்லது அதன் பின்னர், வைப்பீட்டாளர் ஒருவரினால், கோரப்படும்போது அத்தகைய வைப்பையும் அதன்மீதான வட்டியையும் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறுயினும், அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் எவரும், அத்தகைய தவறு தமது அறிவுக்கெட்டாமல் புரியப்பட்டதெனவும், அத்தவறு புரியப்படுவதை தடுக்க உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் எனவும் எண்பித்தால் அவர் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதலாகார்.

(2) ஒராம் உட்பிரிவின் நியதிகளின்படி முதிர்வடைவதன்மீது, அவரது வைப்பும் அதன்மீதான வட்டியும் செலுத்தப்பட்டில்லாதிருக்கின்றவாறான வைப்பீட்டாளர் எவரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்

2—டீ 012939—1,150 (91/03)

கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் நியதிகளின்படி, நீதிவான் நீதி மன்றத்தில் வழக்கு நடவடிக்கை தொடுக்கலாம்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின் (த) என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்

3. "முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(த) சம்பளம், படி, மேல் வரும்படி அத்துடன் செலவினங்களின் செலவீடு என்ற வகையில், நிதிக் கம்பெனிகளின் பணிப்பாளர்களுக்கான அல்லது ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் வேறு கொடுப்பனவு.''.

முதன்மைச் சட்ட வாக்கத்தில் 12 ஆ என்னும் பிரிவை உட்புகுத்தல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 12ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நிதிக் கம்பெனியில் மத்திய வங்கியின் பிரதிநிதி என்றவாறு அதன் அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல்.

12ஆ. (1) இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையானது இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பெனி ஒவ்வொன்றிலும் அத்தகைய கம்பெனியின் அலுவல்களைக் கண்காணிக்கும் நோக்கத்திற்கென அதன் பிரதிநிதியாக இலங்கை மத்திய வங்கியின் அலுவலரொருவரை நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் 12 ஆம் பிரிவினால் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம் ; அத்துடன்

(அ) அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபையின் கூட்டங்களில் பங்குபற்றுவதும் அத்துடன் அவரது கருத்துப்படி, அக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் கடன்தருநர்களினதும் நலனுக்கு அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு முரணானதாகும் ஏதேனும் கருமத்தின்மீது முடிவொன்று எடுக்கப்படுவதை நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஒத்திப்போடுவதும் (அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவது) அத்தகைய பணிப்பாளர்

சபையின் கடமையாதல் வேண்டும். அதன் பின்னர் பணிப்பாளர் சபையானது பணச் சபையின் தவிசாளரது எழுத்திலான ஒருப்பாட்டுடன் மட்டுமே அத்தகைய கருமத்தின் மீது முடிவொன்றை எடுக்கலாம் ;

(ஆ) அவசியமானதென அவர் கருதும் போது அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபையின் கூட்டங்களைக் கூட்டுவதும்;

(இ) அத்தகைய கம்பெனியின் அலுவல்களைக் கண்காணிப்பதிலும் மேற்பார்வை செய்வதிலும் அவருக்கு உதவுவதற்கென, உயர் தொழில் அல்லது நிபுணத்துவப் பணியாட்டொகுதியினரை வேலைக்கு அமர்த்தலும் அவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் நிதிக்கம்பெனியின் முகாமையாளர், செயலாளர், ஊழியர் அல்லது கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் இப்பிரிவின் கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதலும் அத்துடன் அப்பிரதிநிதியின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஆளுக்கு அந்நிதிக் கம்பெனியின் பணமீதிகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் உட்பட அதன் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் பார்வையிட அனுமதிக்குமாறு பணிப்பாளரால் கோரப்பட்ட பொழுதெல்லாம் அவ்வாறு பார்வையிட அனுமதித்தலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(4) அத்தகைய பிரதிநிதியையும் அவருக்கு ஆதரவான பணியாட்டொகுதியையும் தொழிலுக்கமர்த்துவதற்கான செலவுகள் நிதிக் கம்பெனியிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(5) பிரதிநிதியினதும் அவரது பணியாட் டொகுதியினதும் தொழில் பற்றிய நியதி, நிபந்தனைகள், சபையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(6) பிரதிநிதி இப்பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பணிப்பாளரின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின் கீழும் பிரயோகித்தல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1) சபையானது, பணிப்பாளரின் அறிக்கையில் தரப்பட்டுள்ள நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்ததன்மேல், நிதிக்கம்பெனியின் முன்னைய அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதம நிறைவேற்றுநர், முகாமையாளர், ஊழியர் அல்லது முகவர் எவரேனும், கம்பெனிக்குச் சொந்தமான எதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைத் துர்ப்பிரயோகம் செய்ததன்மேல் அல்லது கம்பெனிக்குச் சொந்தமான எதேனும் பணத்தை அல்லது ஆதனத்தை தகாதவாறு பயன்படுத்துவதன் மூலம் மோசடியாகவும் பிழையாகவும் சட்டமுறையற்றதாகவும் தம்மை வளப்படுத்திக் கொண்டார் என அல்லது வேறு எவரேனும் ஆளை அல்லது ஆட்களை வளமடையச் செய்தார் என அல்லது செய்யாது விட்டுவிடும் செயல் ஒன்றன்மூலம், கம்பெனிக்குச் சொந்தமான பணத்தை அல்லது ஆதனத்தை, துர்ப்பிரயோகம் செய்ததன்மேல் அல்லது தகாதவாறு பயன்படுத்துவதன் மூலம் மோசடியாக, பிழையாக அல்லது சட்டமுறையற்றதாக இன்னோர் ஆள் தம்மை வளப்படுத்திக்கொள்ள இயலச் செய்தார் என அபிப்பிராயப்பட்டால், சபையானது, 18 ஆம் பிரிவின் கீழும் அல்லது 20 ஆம் பிரிவின்கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது எவ்வாறிருப்பினும், நிதிக் கம்பெனிக்குரியதாக எற்றிக் கூறப்படற்பாலதான அல்லது நிதிக்கம்பெனிக்குச் சொந்தமானதென நியாயமாக ஐயப்படக் கூடிய அல்லது நிதிக்கம்பெனிக்குச் சொந்தமாக இருந்ததென நியாயமான ஐயப்படக்கூடிய எதேனும் சொத்தைக் கொள்ளுவதற்கு எதேனும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அல்லது எதேனும் தனிசை அல்லது பொறுப்பை விடுவிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது அல்லது செலவழிக்கப்பட்டிருக்கிறது என நியாயமாக ஐயப்படக்கூடிய பணத்தை அல்லது ஆதனத்தை,

அத்தகைய பணத்தின்மீது சபை தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான அத்தகைய வட்டியுடன், சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள் நிதிக் கம்பெனிக்கு மீளச் செலுத்துமாறு அல்லது மீளக் கொடுக்குமாறு அத்தகைய பணிப்பாளரை, பிரதம நிறைவேற்றுநரை, முகாமையாளரை, முகவரை அல்லது வேறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் :—

(அ) அதன் (எ) என்னும் பந்தியில்—

(i) "நிதிக்கம்பெனியொன்றின் நிதிகளென ஏற்றுக் கூறப்படற்பாலதான பணத்தைக்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தை அல்லது சொத்துக்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிதிக் கம்பெனியொன்றின் நிதிகளென ஏற்றுக் கூறப்படற்பாலதான பணத்தைத் தகாதவாறு பயன்படுத்தியதன் மூலம் அல்லது துர்ப்பிரயோகம் செய்ததன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட ஆதனத்தை அல்லது சொத்துக்களை எவரேனும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) "இப்பந்தியின்கீழ் வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும்" என்னும் சொற்களில் இருந்து அப்பந்தியின் முடிவுவரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலமும்:—

"இப்பந்தியின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும் என்பதுடன், (எ) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுவலுவிலிருக்கின்ற காலப்பகுதியின்போது, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனத்தின் அல்லது எவையேனும் சொத்துக்களின் சொத்தாண்மையினது, உடைமையினது அல்லது வேறு அக்கறையினது கைமாற்றம் எதுவும் வறிதானதாதலும், பயனற்றதாதலும் வேண்டும்.";

(ஆ) அதன் (ஐ) என்னும் பந்தியில், "அந்த அதிகாரியின் கட்டுக்காப்பிலுள்ள தோதான புத்தகங்களில் அல்லது பதிவேடுகளில் அத்தகைய அறிவித்தலைப் பதிவு செய்யுமாறு தேவைப்படுத்தலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்த அதிகாரியின் கட்டுக்காப்பிலுள்ள தோதான புத்தகங்களில் அல்லது பதிவேடுகளில் அத்தகைய அறிவித்தலைப் பதிவு செய்யுமாறு தேவைப்படுத்தலாம்; அத்துடன் அறிவித்தலொன்று வலுவிலிருக்கின்ற காலப்பகுதியின் போது, (எ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளவர்களான காணிப் பதிவாளர், மோட்டார் வாகன ஆணையாளர்; அத்துடன் கம்பெனிகள் பதிவாளர்; அத்துடன் எவரேனும் வேறு இயைபான அதிகாரி, அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆதனம் அல்லது சொத்துக்கள் தொடர்பிலான கைமாற்றல் உறுதி அல்லது சாதனம் எதனையும் அல்லது வேறு உரித்தாவணத்தைப் பதிவு செய்தல் ஆகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (ஒ) என்னும் பந்தியில்

(i) அதன் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப்பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:—

"(ii) மாவட்ட நீதிமன்றமானது, (1) ஆம் உட்பந்தியின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதிக்கம்பெனியொன்றின் அத்தகைய முன்னைய அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதம நிறைவேற்றுநர், முகாமையாளர், ஊழியர் அல்லது முகவர், கம்பெனிக்குச் சொந்தமான எதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைத் துர்ப்பிரயோகம் செய்ததன் மூலம் அல்லது வேறு தகாதவாறு பயன்படுத்தியதன் மூலம் மோசடியாகவும், பிழையாகவும், முறையற்றதாகவும் தம்மை வளப்படுத்திக்கொண்டுள்ளார் என அல்லது வேறு எவரேனும் ஆளையோ அல்லது ஆட்களையோ வளப்படுத்தச் செய்திருக்கிறார் என அல்லது செய்யாது விட்டுவிட்ட செயலொன்றின்மூலம்

கம்பெனிக்குச் சொந்தமான பணத்தை அல்லது ஆதனத்தைத் துர்ப்பிரயோகம் செய்ததன்மூலம் அல்லது வேறு தகாத பயன்பாட்டின்மூலம் எவரே னும் ஆளை, மோசடியாகவும் பிழை யாகவும் சட்டமுறையற்ற தாகவும் வளம் பட இயல செய்திருக்கிறார் எனத் திருப் திப்பட்டதன் மீதும்—

(அ) நிதிக் கம்பெனியின் அத்தகைய பணிப்பாளரினால், பிரதம நிறை வேற்றுநரினால், முகாமையாளரி னால், ஊழியரினால் அல்லது முகவரினால் அல்லது அவ்வாறு வளமடைந்த வேறு எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் ஆதனத்தை அல்லது எவையேனும் சொத்துக்களை; அல்லது

(ஆ) நிதிக்கம்பெனியின் அத்தகைய பணிப்பாளருக்காக, பிரதம நிறை வேற்றுநருக்காக, முகாமையாள ருக்காக, ஊழியருக்காக அல்லது முகவருக்காக உறவினர் ஒருவரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் நம்பிக்கைப்பொறுப்பாக வைத்திருக்கப்படும் ஏதேனும் ஆதனத்தை அல்லது எவையே னும் சொத்துக்களை; அல்லது

(இ) நிதிக்கம்பெனியின் சொத்துக்க ளுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலன வான பணங்களைக்கொண்டு கொள் ளப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத் தை அல்லது சொத்துக்களை,

பறிமுதல்செய்து விற்குமாறு பிசுக்கா லுக்கு அதிகாரமளிக்கின்ற, அவரைத் தேவைப்படுத்துகின்ற நிறைவேற்றெழுத் தாணையொன்றை பிசுக்காலுக்கு வழங்கு மாறு பணித்தல் வேண்டும்.

(iii) பந்தி (ஒ) வில் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் வழங்கப்பட்ட எழுத்தாணையொன் றைப் பின்பற்றி ஏதேனும் ஆதனம் அல்லது சொத்துக்கள் விற்கப்படுகின்ற விடத்து, விற்பனையில் கிடைத்த தொகைப்

பணத்தில், நிதிக்கம்பெனிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான நீதி மன்றத்திலுல் வைத்திருக்கப்படும் பணத்திலும் மேலாக விஞ்சுதொகை ஏதும் இருப்பின் அது, அத்தகைய சொத்துக்களில் அல்லது ஆதனத்தின் சொந்தக்காரருக்குத் திருப்பித் தரப்படல் வேண்டும்; அத்துடன்";

(ii) இதன் (iii) ஆம் (iv) ஆம் உட்பந்திகளை (iv) ஆம் (v) ஆம் பந்திகளென மீள இலக்கமிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில் அதன் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(இ) நிதித்தொழிலின் ஏதேனும் அம்சம் தொடர்பிலான ஏதேனும் முற்பகர்வு அல்லது விளம்பரம் ஏதேனும் நிதிக் கம்பெனியால் வழங்கப்படுவதைத் தடைசெய்தலின் மீதான ஒழுங்குவிதியையும்; அத்துடன் எந்த நிபந்தனைகளுக்கமைய அத்தகைய முற்பகர்வு அல்லது விளம்பரம் வழங்கப்படலாகுமோ அந்த நிபந்தனைகளும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது.

"தண்டங்கள்.

38. (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வொரு ஆளும் நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் குற்றப்பணத்தை அல்லது அதன் பாகத்தைச் செலுத்துவதற்காக விடயத்திற்கேற்றுற்போல ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் எவையேனும் நிதிகளைப் பிரயோகித்தால் இச்சட்டத்தின்கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டு குற்றப்பணமொன்றைச் செலுத்துமாறு கட்டளையிடப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமை

யாளர் அல்லது செயலாளர் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் எல்லாக் குற்றப்பணங்களும் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும் வைப்பாளர் நிவாரண நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, "நிதிக்கம்பெனி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"நிதிக் கம்பெனி" என்பது, நிதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் வரைவிலக்கணத்தில் கூறப்பட்டவாறான கம்பெனி ஒன்று எனப் பொருள்படும்; அத்துடன், இச்சட்டத்தின்கீழ் சபையினால் அல்லது பணிப்பாளரினால் எடுக்கப்படக்கூடிய எதேனும் நடவடிக்கையின் நோக்கத்துக்காக, அத்தகைய "நிறுவனம்", இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று நிதித்தொழிலைச் செய்யாதொழிந்துவிட்டது எவ்வாறிருப்பினும், 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் கட்டுப்படுத்தல் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வருகின்ற நிறுவனம் எதனையும் உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்.

நடவடிக்கைகள் முதலியன செல்லுபடியாதல்.

9. 1990 நவம்பர் 20 இல் தொடங்கி இச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியின் போது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால (நிதிக் கம்பெனிகள்) ஒழுங்குவிதிகளை சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை, ஆக்கப்பட்ட கட்டளை அல்லது வழங்கப்பட்ட பணிப்பு எதுவும், அவ்வொழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் அதிகாரமளித்துள்ளது என்றாற்போன்று செல்லுபடியாதலும் பயனுறுதலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.